மற்றவைகள் கொண்டாடும்பொழுது கிராமத்திலிருக்கும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கம் தன்னால் இயன்ற அளவிற்குச் செய்து வருகிறது, பொது மக்களும் ஒத்துழைத்தால் சிறப்பு பெற்றுவிடும்.

நடிப்புக் கலையில் பட்டப் படிப்பு

*428. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடிப்புக் கலையில் பட்டப் படிப்புத் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களுக்கு பட்டப் படிப்பு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. சில வெளிநாடுகளில் நடிப்புத் துறையில் இருப்ப வர்களுக்கு பயிற்சி கொடுத்து பட்டம் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதேபோல் இங்கும் நடிப்புத் துறையில் பயிற்சி கொடுத்து பட்டப் படிப்பும் அதற்காகத் துவங்க அரசுக்கு எண்ணம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நடிப்புத் துறையில் பட்டப் படிப்பு துவங்க இப்போது முயற்சி இல்லை. ஆனால் பிலிம் இன்ஸ்டிட்யூட் திரைப்படத்துறையில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கும் விதத்தில் நடிப்புத்துறையிலும் இப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்டம் தருகிற படிப்பு இல்லை. சான்றிதழ் தருகிற வகையில் துவங்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் வாங்குகிற டிக்ரியைப் பொறுத்து நடிப்புக் கலையைப் பார்த்து யாரும் மகிழத் தக்க நிலை இருக்காது. அவரவர்கள் நடிப்பினைக் கொண்டுதான் மக்கள் மதிப்பளிக்கும் வகையில் இருக்கிறதே தவிர அப்படிப்பட்டதொரு சூழ்நிலை உருவாக்கும்போது, பட்டப் படிப்பிற்கு மதிப்பு ஏற்பட்டு அதன் அடிப்படையில் கலைகளை நிகழ்த்த முன்வரும்போது, அப்படிப்பட்ட ஒன்றை வரவேற்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அப்போது இதற்கு வாய்ப்பு ஏற்படும். இப்போது பிலிம் இன்ஸ்டிட்யூட்டில்தான் நடிப்புக் கலைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

1972 மார்ச் 11]

திரு. ஏ. சி. நரசிம்மன் : முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் என்று . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இயல், இசை இவைகளுக்கு பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதேபோல் நடிப்புக் கலையையும் ஏன் பாடமாக வைத்து கற்றுக்கொடுக்கக்கூடாது? கல்லூரிகளில் பி.ஏ. வரையில் நடிப்புக் கலைக்கு ஒரு பாடம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னேன். நடனத்திற்கு பட்டப் படிப்பு வைக்க வில்லை. நடனம் சொல்லிக் கொடுக்க சென்னையில் இன்று நூற்றுக் கணக்கான பள்ளிகள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக சொல்லிக்கொடுக்கக்கூடிய திறன் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இயல் படிப்பு கூட ஒருகாலத்தில் இப்படித்தான் இருந்தது. நாளாவட்டத்தில் மெள்ள மெள்ள அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் துறையாக மாறிற்று. கலைகள் எல்லாம் தனிப்பட்டமுறையில் பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர்தான் பொது மக்கள் வரவேற்கக் கூடிய நிலை பெற்றிருக்கிறது. அதே நிலையில்தான் நடிப்புக் கலையும் இருந்துவருகிறது.

திரு. கோவை செழியன் : நடிப்புத் துறையில் பட்டம் தரா விட்டாலும் அதற்கான ஒரு கல்லூரியையாவது ஏற்படுத்துமா? பம்பாய்க்கு அருகில் பூனாவில் அதற்கான ஒரு கல்லூரி இருக்கிறது. இப்போது தமிழ்ப் பட உலகில் நடிகர்கள், நடிகைகள் கிடைக்காமல் மிகவும் சிரமமாக இருக்கிறது. புது முகங்கள் நிறையத் தேவைப்படுகிறது. நான் ஒரு படத் தயாரிப்பாளன் என்ற முறையில் அந்தக் கஷ்டத்தை அனுபவித்து வருகிறேன். ஆகவே நன்கு தேர்ச்சி பெற்ற நடிகர்கள், நடிகைகளை எங்களுக்குத் தயார் செய்து அனுப்பு வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது நடிப்புக் கலையில் பயிற்சி அளிக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. புதுமுகங்களைத் தேர்ந்தெடுப்பது என்பதில் நாட்டில்

நாடகக் கலையை வளர்க்கும் முயற்சி இருந்தால் அப்படித் தேர்ந்தெடுக்கமுடியும். நாடகக்கலை வளர்ச்சியடையாத நிலையில் பள்ளிகளில் படித்துவிட்டு பயிற்சிபெறுபவர்களிடம் இருந்து நடிகர்களை ஒரு நாடு தேர்ந்தெடுத்துவிட முடியாது. நம் நாட்டு பழக்கப்படி நாடகக்கலைக்கு மெருகு ஏறினால்தான்—அதிலிருந்து தான் நல்ல நடிகர்களை திரைப்பட உலகத்திற்கு தேர்ந்தெடுக்க முடியும், அப்படித்தான் எடுக்கிறார்கள். அந்த வகையில் நாடகக் கலைக்கு என்னென்ன வகையில் ஊக்கம் தரமுடியுமோ அப்படி நாடகக் கலை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : புதிய நடிகர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக நடிப்புத்துறையில் ஈடுபட்டுள்ள வயதான நடிகர்களுக்கு வயதுவரம்பு கட்டுவதற்கு, கட்டாயமாக வயது வரம்பு வைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நடிப்புத் துறையில் இன்ன வயதுதான் இருக்கவேண்டும் என்பதல்ல. 97 வயது உடையவர்கள் கூட சிறந்த நடிகர்களாக இருக்கிறார்கள். பாத்திரத்திற்கு ஏற்ற பொருத்தம் இருக்கிறதா, அதற்கான திறமை இருக்கிறதா, மக்கள் மதிக்கிறார்களா, மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார்களா, மக்கள் உள்ளங்களில் தங்கியிருக்கிறார்களா என்பதுதான் முக்கியமே தவிர வயதுக்கு உச்சவரம்பு கட்டுவது என்பது இந்தத் துறையைச் சரியாக அறியாதவர்கள் சொல்லும் கூற்றே தவிர அறிந்தவர்களாக இருந்தால் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

முதியோர் கல்வித் திட்டம்.

*429 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் முதியோர் கல்வித் திட்டத்தை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: ஆம்.